செய்தி குறிப்பு எண்: 109 21.12.2009

<u>வேளாண்மை அமைச்சர் அலுவலகம்</u>

## பத்திரிகைச் செய்தி

20.12.2009 நாளிட்ட சென்னை பதிப்பக நாளேடு ஒன்றில் ‘‘வறட்சிக்கு இலக்காகும் திட்டம்‘‘ துறை மாற்ற முயற்சி எனவும், ஊழியர்கள் மிரட்சி என்ற தலைப்பில் வெளிவந்துள்ள செய்தி முற்றிலும் உண்மைக்கு மாறாக, தவறு இழைத்து பயன்பெற்றுவரும் ஊழியர்கள் தந்துள்ள செய்தியாகவே வேளாண்மைத் துறை கருதுகிறது.

மழை நீரை சேமிக்கவும், நிலத்தடி நீரை பாதுகாக்கவும், மண்ணின் ஈரப்பதத்தையும் பாதுகாப்பதே நீர்வடிப் பகுதி மேம்பாட்டு திட்டங்களின் நோக்கமாகும். தற்போது தமிழகத்தில்

1) தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு திட்டம்

2) தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம்

3) வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

ஆகிய தலைப்புகளின் கீழ் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் மூலம் நிலத்தடி நீர் ஆதாரத்தை பெருக்க சிறு தடுப்பணைகள் கட்டுதல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், மண் அரிப்பை தடுக்கவும், ஈரப்பதத்தை காக்கவும், ஒவ்வொரு திட்டத்தின் மூலமும் தனித்தனியாக பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதனால் சிறிய அளவிலான பண்ணைக் குட்டைகளும், மழை நீர் வழிந்தோடும் பகுதிகளில் சிறிய குழிகள் (pits) தோண்டி பூமிக்குள் நீர் உறிஞ்சப்பட்டு நிலத்தடி நீர் பாதுகாக்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் சிறிய சிறிய அளவிலான பணிகளாக உள்ளதால், செய்யப்பட்ட பணிகள் மழையினால் அடித்துச் செல்லப்பட்டுவிடுகிறது. செய்த பணிகள் விவசாயிகளுக்கு பயன்படாததுடன், ஒரே கிராமத்தில் மூன்று திட்டங்கள் மூலமாக பணிகள் மேற்கொள்ளும் போது, தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது என்பதை கருத்தில் கொண்டு, ஒரே பணியை ஒரே இடத்தில் மீண்டும் மீண்டும் செய்வதை தவிர்க்கவும், நிரந்தரமாக நிலைத்து இருக்கும் வகையில் மூன்று திட்டங்களையும் ஒருங்கிணைத்து ஏரிகளுக்கு நீர்வரத்தை கண்டறிந்து பணிகளை தொடங்கவும், பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள், பாசன கால்வாய்கள், நீர்வரத்து கால்வாய்களை அமைப்பதன் மூலம் விவசாயிகளுக்கு நீர் ஆதாரத்தை உருவாக்கித் தர வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு 2008–2009ஆம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று இந்த அறிவிப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இப்பொழுது நாம் முடிவு செய்து இருப்பதைப் போல, மத்திய அரசும், கொள்கை முடிவு எடுத்து இருப்பதன் மூலம், நிதி ஆதாரத்தை முறையாகப் பயன்படுத்தவும், அதன் மூலம் நீர் ஆதாரத்தை சேமிக்கவும் இயலும் என முடிவு செய்துள்ளதன் அடிப்படையில், தமிழகத்தில் பல்வேறு திட்டங்களின் கீழ் சிறிய, சிறிய அளவில் பணிகளை மேற்கொள்வதால், வீணாகும் நிதியை முறைப்படுத்தவும், ஒரே பணியை ஆண்டுக்காண்டு மீண்டும், மீண்டும் புதுப்பித்து வருவதை தடுக்கவும், மத்திய, மாநில அரசுகளின் நிதியை முறையாக பயன்படுத்த தமிழகத்தில் அறிவிக்கப்பட்ட திட்டத்தினை, மத்திய அரசின் தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி முகமை (NRAA) இதே கொள்கையை வலியுறுத்தி பல திட்டங்களாக செயல்படுத்துவதை ஒருங்கிணைத்து 5 ஆண்டுகளுக்கான தேவை என்ன என்பதை

கணித்து சிறிய, சிறிய அளவிலான நிலத்தடி நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை செய்வதற்கு பதிலாக நிரந்தரமான பெரிய அளவிலான திட்டங்களை இதன் மூலம் செயல்படுத்த திட்டமிட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதைத் தான் தமிழகத்திலும் நடைமுறைப்படுத்த அரசு முன்வந்துள்ளது.

இம்மூன்று திட்டங்களும் வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்ட இயக்குநர், வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டு வருவதுடன், இத்திட்டத்தினை மாநில அளவில் செயல்படுத்தும் அலுவலராகவும் உள்ளார். மாவட்ட அளவில் ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் உள்ள திட்ட அலுவலர்களுக்கு வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தினை கண்காணிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சித் துறையில் பல்வேறு திட்டப் பணிகள் செய்யப்பட்டு வருவதால் மாவட்ட திட்ட அலுவலரால், வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தினை முழுமையாக ஆய்வு நடத்த இயலவில்லை. மேலும் திட்டங்கள் செயல்படுத்துவது மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழ் உள்ள குழுவில் வைத்துத் தான் திட்டப் பணிகள் அனுமதிக்கப்படுகிறது. இதில் தவறு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

விவசாயிகளின் நலன் கருதி வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் உட்பட மூன்று திட்டங்களையும் ஒருங்கிணைத்து, வேளாண்மை துணை இயக்குநர் நிலையில் மாவட்ட அளவிலான அலுவலராக இதற்கென நியமனம் செய்யப்பட்டு, நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டங்களை முழு வீச்சில் செயல்படுத்தினால் நீர் ஆதாரத்தை அதிகரித்து விவசாயிகள் பெரிதும் பயன்பெறுவர்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் மூலம் கண்டறியப்படும் வேளாண் தொழில் நுட்பங்கள் விரைவில் விவசாயிகளை சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு வேளாண்மைத் துறையின் நிர்வாக அமைப்பு மூன்றடுக்கு முறையாக இருந்ததை மாற்றி இரண்டு அடுக்கு முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு மறு சீரமைக்கப்பட்டு, வேளாண்மை மற்றும் அதன் சகோதர துறைகளான, தோட்டக்கலை, விதை சான்றளிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறைகளில் தொழில் நுட்பங்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு கிடைக்கும் வகையில் ஊராட்சி ஒன்றிய அளவில் அனைத்துத் துறை பணியாளர்களும் நியமிக்கப்பட்டு சிறப்பாக பணிபுரிந்து வருகிறார்கள். விவசாயிகளும் எங்களுக்கு எல்லாவிதமான தொழில் நுட்ப ஆலோசனைகளும், அரசு அளித்து வரும் மானியங்களும் எளிதாக, விரைவாக பெற முடிகிறது என மகிழ்ச்சியை தெரிவித்து வருகிறார்கள்.

வேளாண்மைத் துறை மறு சீரமைக்கப்பட்ட நிலையில், கடந்த ஆட்சியில், பல ஆண்டுகளுக்கும் மேலாக பதவி உயர்வு இன்றி இருந்த வேளாண்மை, தோட்டக்கலை அலுவலர்களுக்காக விதிகளை தளர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் அமைந்துள்ள இந்த அரசு 2354 அலுவலர்களுக்கு இதுவரை பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. மேலும் வேளாண்மைத்துறையில் காலியாக இருந்த 520 வேளாண்மை அலுவலர் பணியிடங்கள், 1595 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்கள், 47 தோட்டக்கலை அலுவலர் பணியிடங்களை நிரப்பி, அலுவலர்களை ஊக்கப்படுத்தி திட்டங்கள் முழுமையாக விவசாயிகளிடம் சென்றடையும் வகையில் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

இந்த நிலையில் நீர்வடிப்பகுதி திட்டப் பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டு மேற்கொள்ளப்படுவதால், பணியாளர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. பணியாளர்களின் பொறுப்பும், கடமையும் வேண்டுமானால் அதிகரிக்கும். பொறுப்பையும், கடமையையும் சரிவர செய்யாத, தட்டிக்கழிக்க நினைக்கின்ற பணியாளர்கள் மட்டுமே, விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு எடுக்கப்படும் இந்த நல்ல முடிவுகளை எதிர்க்கும் நோக்கத்தோடு, செய்தித் தாள்களுக்கு தவறான தகவல்களைக் கொடுத்து திசை திருப்பப் பார்ப்பது அவர்கள் நினைப்பது போல வெற்றி பெற இயலாது என்பதை உணராத, தவறு செய்பவர்கள், இந்த திட்டம் வேளாண்மைத் துறைக்கும், ஊரக வளர்ச்சித் துறைக்கும் சம்பந்தப்பட்டது என மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடப் பார்க்கிறார்கள்.

இதுபோன்ற உண்மைக்கு மாறான தகவல்களை இத்திட்டத்தின் கீழ் பணிபுரியக் கூடிய சில புல்லுருவிகள் பத்திரிகைகளுக்கு செய்தி தருவது கண்டிக்கத் தக்கது. இத்தகைய தவறான செய்திகள் எங்கிருந்து சென்றது என கண்டறிய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

***********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.